

## புனித ஆசீர்வாதப்பர் சபை

## துறவற ஆசிரமம்

1931 ஆம் ஆண்டு சேர் தோமஸ் லிஸ்டர் வில்லியஸ் என்னும் ஆங்கிலேய ரினால்இ ஆடம்பரமான கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மாளிகையே “அடிசம்” ஆகும். இது அழகான சுற்றுப்புறச் சுழலைக் கொண்ட மிக அமைதியான இடத்தில் அமைளப்பெற்றுள்ளது. அலைப்போன்ற மலைக்குன்றுகளால் சூழப்பட்ட இவ்விடம் சிறப்பாக தமது ஓய்வுநாளை செலவிட அல்லது உல்லாசப் பிரயாணங்களை மேற்கொள்பவர்கள் நிச்சயமாக பார்க்க வேண்டிய ஒரு இடமாக அமைந்துள்ளது. காரணம் நகரத்தின் நொசல்கள் மிகுந்த சூழலில் இருந்து தனியாக அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

முறையாக பராமரிக்கப்பட்டு வரும் அழகிய பூந்தோட்டம், பர்மா தேக்கினால் முற்றிலுமாக மூடப்பட்டுள்ள இம்மாளிகையின் கூரை, பழங்காலத்து தளபாடங்கள், ஆகியவற்றுடன் இன்றுவலர மிக நோத்தியாக திட்டமிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் விதம் அனைத்தும் இங்கு வரும் பார்வையாளர்களின் மனதை ஈர்க்கும் விடயங்களாக உள்ளன.

இந்த மாளியானது 1961 ஆம் ஆண்டு சில்வெஸ்டர் ஆசீர்வாதப்பர் துறவற சபையினரால் வாங்கப்பட்டு குருத்துவபயிற்சி மாணவர்களுக்கான பயிற்சியகமாக உள்ளது. துறவற வாழ்வில் தம்மெ இணைத்து கொள்ள வரும் குருமாணவர்கள் இங்கு பயிற்றப்படுகின்றனர். இத்துறவற சபையின் ஒழுக்க விதிகளை கோடிட்டு காட்டுவதாக

அமைந்துள்ள புனித ஆசீர்வாதப்பரின் விருதுவாக்கான "செபமும்" வேலையும் என்ற வசனத்தை தன்னகத்தே கொண்டு சிறப்பாக அமைந்துள்ளது.

துறவிகளில் வாழ்க்கை செலவுகள் மற்றும் ஏனைய பராமரிப்பு செலவுகள், ஆகியவற்றினை நிறைவேற்றக்கூடிய முக்கிய வருவாயைப் பெற்றுத்தரக்கூடிய விடயமாக உள்ள ஜாம் தயாரிப்பு தொழிற்சாலை மற்றும் பண்ணை தொழில்கள் ஆகியவையும் கூட இங்குள்ள துறவிகளாலேயே கொண்டு நடத்தப்படுவமும் குறிப்பிடத்திக்கது.

இம்மாளிகையில் அமைந்துள்ள பூந்தோட்டம் மற்றும் புல் தரை ஆகியவை ஆங்கிலேயரிடமிருந்து வாங்கப்பட்டபோது இருந்த மிக எளிமையான அமைப்பில் இருந்து எதுவித மாற்றமும் செய்யப்படாமல் இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகிறது. பல வர்ணங்களை கொண்ட மலர்கள், பச்சைப் பசேலென வளர்ந்திருக்கும் மரங்கள் ஆகிய அனைத்திற்குமான பராமரிப்பு செலவீனங்கள் அதிகமாக இருந்தபொதிலும் அதற்கான சிறுதொகை பணத்தை உல்லாசப் பிரயாணிகளிடம் பெறப்படும் அண்பளிப்புகள் இருந்து பெற்று பயன்படுத்தப்படுவதும் குறிப்புடத்தக்கது.

வார இறுதிநாட்கள் (சனி. ஞாயிறு) போயா தினங்கள், ஏயைிறு) போயா தினங்கள், ஏனைய வர்த்தக விடுமறை நாட்களில் (பெரிய வெள்ளி, நத்தார் தினம் தவிர்ந்த) இவ்விடத்தின் அழகினை கண்டு களிக்க உங்களையும் அழைக்கின்றோம். உட்புறரத்தில் அமைந்துள்ள சில இடங்களுக்கு செல்ல பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. எனினும் அந்த இடங்கள் பற்றிய வீடியோ காட்சிய்னுடாக அதனை காண்பதற்கு ஏறிபாடுகள் இங்கு செய்து தரப்பட்டுள்ளது எண்பதும் இதன் சிரப்பம்சமாகும்.